# நிதி நிலை அறிக்கை

# 1999 - 2000

முதலமைச்சர்

**திரு. மு. கருணாநிதி**

அவர்கள் ஆற்றிய உரை

*பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு 2030*
*1999 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள்*

**தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள், 1999–2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1999 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாளன்று ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட்டு உண்மையான கூட்டாட்சி தத்துவம் உருவாக்கப்படவும், மாநில சுயாட்சி மலரவும், மத்திய ஆட்சி மொழிகளாக அனைத்து தேசிய மொழிகள் இடம் பெறவும், முதல் கட்டமாக தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி கிடைத்திடவும், திராவிட இயக்கத்தின் சமூக நீதிக் கொள்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்களின் முன்னேற்றத்தையும், சிறுபான்மை சமுதாயத்து மக்களின் பாதுகாப்பையும், மத நல்லிணக்கம் மனித நேயம் இணைந்த சமூக ஒற்றுமையையும் பேணிக் காத்திடவும் கழக அரசு தொடர்ந்து அண்ணா வழியில் அயராது பணியாற்றும் என்ற உறுதி மொழியுடன் 1998–99ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1999–2000ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீடுகளையும் இந்த அவைமுன் வைக்கிறேன்.

## பொருளாதார வளர்ச்சி

2. நமது தமிழகத்தின் பொருளாதார நிலை 1997–98 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1998–99 ஆம் ஆண்டில் வளரும் பிறையாகவே திகழ்கிறது எனலாம். 1993–94 ஆம் ஆண்டின் விலைகளின் அடிப்படையில், சென்ற ஆண்டு 6.31 விழுக்காடாக இருந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) இந்த ஆண்டில் 6.78 விழுக்காடாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோர் தொகை கிராமப் பகுதிகளில் 1993–94ல் 32.48 விழுக்காடாக இருந்து 1997–98–ல் 24.72 விழுக்காடாகவும், நகர்ப் பகுதிகளில் 39.77 விழுக்காடாக இருந்து 32.70 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக்

கீழே வாழ்வோரின் தொகை 35.03 விழுக்காடாக இருந்து 27.58 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

## மத்திய மாநில நிதி உறவுகள்

3. 1997 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு அறிவித்தவாறு மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 விழுக்காட்டினை 1-4-96 ஆம் நாளிலிருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இன்னமும் நிறைவேற்றப் படவில்லை என்பதும், ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்படவில்லை என்பதும் பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

4. மத்திய அரசின் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வருமான வரி மற்றும் மத்திய கலால் வரி ஆகியவற்றிலிருந்து வருவாயை அதிகரிக்க மேல் வரி மற்றும் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து வரும் ஏறத்தாழ ரூ.3,000 கோடி கூடுதல் வருவாயையும் மாநிலங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகின்றேன்.

5. வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையை நடப்பு நிதி ஆண்டு முதல் மத்திய அரசு மாற்றியுள்ளதால் திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தி வறுமையின் அளவை குறைத்துள்ள தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பங்கு ஏதோ ஒரு "விபரீத பரிசு" போல 7.062 விழுக்காட்டிலிருந்து 4.987 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதனை மத்திய திட்டக் குழுவின் கவனத்திற்கும், மத்திய அரசின் கவனத்திற்கும் நான் கொண்டு சென்று, நிதி குறைக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியிருந்தேன். அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது குறித்து முழுமையாக ஆராய வல்லுநர் குழு ஒன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் முடிவு ஏற்படும் வரை முன்பிருந்த அடிப்படையிலேயே தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

## உள்ளாட்சி அமைப்புகள்

6. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் – அவர்தம் ஊர் நலன்களுக்கும் – அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பரவலாக வரவேண்டு மென்பதற்காகவே, உறுதியளித்தவாறு உள்ளாட்சி மன்றத் தேர்தலை உடனடியாக இந்த அரசு நடத்தியது. அதேபோல, மாநில அரசின் மொத்த வரி வருவாயில் 8 விழுக்காட்டினை உள்ளாட்சி மன்றங்களுக்கு முதன் முதலில் பகிர்ந்தளித்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இதனால் உள்ளாட்சி மன்றங்கள் 1997–98 ஆம் ஆண்டில் ரூ.685 கோடியும், நடப்பு நிதி ஆண்டில் ரூ.762 கோடியும் பெற்றன. வரும் நிதி ஆண்டில் இது ரூ.845 கோடியாக உயர்வதோடு, கேளிக்கை வரியில் 90 சதவீதப் பங்காக ரூ.80 கோடியும், பத்தாவது நிதிக்குழு மானியமாக மூலதனப் பணிகளுக்கென ரூ.101 கோடியும், மாநில அரசின் நிதியிலிருந்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், மக்கள் தொகை வளர்ந்துவரும் நகர்ப் பகுதிகளில் குடிநீர் வசதியைப் பெருக்க புதிய பொன்விழாத் திட்டத்திற்கு ரூ.50 கோடியும் ஒதுக்கப்படும்.

7. மொத்தத்தில், மாநில அரசால் கொடுக்கப்படும் பல்வேறு மானியங்கள், வரி வருவாய் பங்கீடு மற்றும் **உள்ளாட்சி மன்றங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் வரும் நிதி ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ.2,023 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது நமது மாநிலத்தின் வரி வருவாயில் 19 விழுக்காடாகும்.**

8. இவற்றையன்னியில் விரைவில் உலக வங்கியின் ஒப்புதல் பெறவுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக முறை, கணினிமயமாக்கல், போன்றவற்றிற்காக ரூ.105 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆய்வு செய்ய உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்ட குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள் உள்ளாட்சித் துறையின் மானியக் கோரிக்கையோடு இணைத்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும்.**

## நிர்வாகச் சீரமைப்பு

**10.** தவறிழைப்போர் யாராயினும் தப்பிட இயலாது எனும் நீதி வழியில் பயணம் நடத்துவோம் என்று சூளுரைத்துப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, **நேர்மையான, செயல்திறன் மிக்க நிர்வாகத்தை உறுதிப்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும், நடைமுறை சீரமைப்புச் செய்திட அமைத்திட்ட நீதிபதி திரு இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் இக்கூட்டத்தொடரில் அவையில் வைக்கப்படும்.**

**11.** கடந்த ஆண்டு இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டத்திற்கு அண்மையில் குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

**12. திருவாரூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.38.54 கோடி செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**13.** அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலப் பதிவுருக்களை (Land Records) கணினி மயமாக்க முடிவு செய்யப்பட்டு, 7 மாவட்டங்களில் உள்ள 35 வட்டங்களில் இதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுவிட்டன. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நிலப்பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் பணி அடுத்த ஆண்டிற்குள் முடிவடையும்.

**14.** கணிப்பொறி இணையத்தில் (Internet) அரசு உருவாக்கியுள்ள தகவல் களத்தில் (Web site) எண்பது வகையான விண்ணப்பப் படிவங்கள் ஏற்கெனவே மக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளோம். **இன்னும் ஓராண்டில் அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இணையத்தில் கிடைக்கும். அரசின் பல்வேறு துறைகள் வெளியிட்டுள்ள மக்கள் சாசனங்களையும் இணையத்தின் வாயிலாகப் பெறமுடியும்.**

**15. பள்ளிப்படிப்பை முடித்தபின் மேற்படிப்புக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச்**

சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றன. 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே மாணவர்களால் இச்சான்றிதழ்களுக்குத் தேவையான விண்ணப்பங்கள் நிறைவு செய்யப்பட்டு, தலைமை ஆசிரியர் ஒப்புதலுடன் வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். வட்டாட்சியரின் விசாரணைக்குப் பின் சான்றிதழ்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்படும். படிப்பை முடித்து பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) பெறும் சமயத்தில் பள்ளியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தப் புதிய ஏற்பாட்டினால் மாணவர்கள் இனிமேல் இந்தச் சான்றிதழ்கள் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று காத்திருக்கத் தேவையில்லை.

### ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்

16. ஏழை, எளிய, நடுத்தர, சாதாரண சாமானிய மக்களின் வாழ்வை மையமாக வைத்தே எமது ஆட்சிச் சக்கரம் சுழலும் என்றுரைத்த இனிய தலைவர் பெயரால் அமைந்துள்ள "அண்ணா மறுமலர்ச்சித் திட்ட"த்தின் கீழ், நடப்பு நிதி ஆண்டில், ரூ.182 கோடி செலவில் 212 ஊராட்சிகளில் சாலை, குடிநீர், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற 25,171 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக வரும் நிதி ஆண்டிற்கு ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. இந்த அரசின் மற்றொரு புதிய திட்டமான "நமக்கு நாமே" திட்டத்திற்கு மக்கள் பெருமளவில் ஆதரவளித்து வருகின்றனர். இதன்கீழ் நடப்பு நிதி ஆண்டில் ரூ.24.19 கோடி மதிப்பில் கிராமத் தேவைகளுக்கென 4,231 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்த்திடும் "நமக்கு நாமே திட்டம்" வரும் நிதி ஆண்டிலிருந்து நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படும்.

19. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 35 இலட்சம் வீதம் நடப்பு நிதி ஆண்டில் சாலைகள், பாலங்கள், கல்வி நிலையங்கள் போன்ற 6,389

**பணிகள் ரூ.82.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு, வரும் நிதி ஆண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.**

20. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் 1,420 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணிகள் உட்பட நியாய விலைக்கடைகள், சத்துணவு நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற 43,533 ஊராட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இந்தத் திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக ரூ.48.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

21. இலவச கான்கீரிட் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ், கான்கீரிட் கூரை அமைப்பதற்கான செலவுத் தொகை நடப்பு நிதி ஆண்டில் ரூ.7,000த்திலிருந்து ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டு, வீடு ஒன்றுக்கு ரூ.32,000 செலவு செய்யப் படுகின்றது. வரும் நிதி ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ.19.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்த வீடுகளுக்காக கான்கீரிட் கூரை அமைப்பதற்கான மொத்தச் செலவான ரூ.55.51 கோடியை மாநில அரசே ஒதுக்கி சுமார் 46,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

22. நடப்பு நிதியாண்டில், வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (Employment Assurance Scheme) கீழ், 3,519 கிலோமீட்டர் தார்ச்சாலைப்பணிகள், 1,449 பள்ளிக்கட்டிடங்கள், 2,992 இதர கட்டிடப்பணிகள், 2,834 சிறுபாசனப் பணிகள், 8,521 நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்காக, வரும் நிதி ஆண்டில் மாநில அரசின் பங்காக ரூ.47.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

23. கிராமங்களில் தெரு விளக்கு வசதியே இல்லாத குடியிருப்புப் பகுதிகளில் கடந்த நிதி ஆண்டில் 20,000 தெருவிளக்குகள் அமைத்ததன்னியில் மேலும் 25,714 தெருவிளக்குகள் அமைத்திட நடப்பு நிதி ஆண்டில் அரசு ரூ.12.6 கோடி ஒதுக்கியுள்ளது.

**24. மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது மதிப்பூதியமாக மாதம் ரூ.500 பெறுகிறார்கள். அரசின் பல திட்டங்களை மக்களுக்கு விளக்கி அதன் பயன்களை மக்கள்**

**துய்த்திட துணைநிற்கும் அவர்தம் நற்பணியைக் கவனத்தில் கொண்டு, அவர்கள் மேலும் ஆர்வமுடன் செயல்பட அவர்களின் மாத மதிப்பூதியம் ரூ.750 ஆக உயர்த்தப்படுகிறது. பயணப்படியாக மாதம் ரூ.50 அளிக்கப்படும்.**

## ஊரகக் குடிநீர் வழங்கல்

25. மண் வளமுறவும் மனிதர் நலமுறவும் "நீரின்றி அமையாது உலகு" எனும் குறளை நினைவிற்கொள்ள வேண்டுமென்ற சிந்தனையுடன் செயலாற்றும் இந்த அரசு, ஊரகக் குடிநீர் வழங்கல் பணிக்காக நடப்பு நிதி ஆண்டின் ஒதுக்கீடான ரூ.330 கோடி என்பதை வரும் நிதி ஆண்டில் ரூ.450 கோடியாக உயர்த்தியுள்ளது. குறைவாகக் குடிநீர் பெற்றுவரும் 6,300 குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் பணி வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

26. ஊரகப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு அளிக்க இந்த அரசு எடுத்துள்ள முடிவு நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. ஆகவே, இனிவரும் காலங்களில் கூடுதல் வீட்டிணைப்புத் தேவையையும் சேர்த்து, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் வகையில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் வடிவமைக்கப்படும்.

## நகர்ப்புறக் குடிநீர் வழங்கல்

**27. குறைவாகக் குடிநீர் பெற்றுவரும் நகர்ப்புறங்களில் முதற்கட்டமாக 10 நகராட்சிகளிலும், 25 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்கலை மேம்படுத்த பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டம் ஒன்று ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, ரூ.100 கோடிக்கு மேல் நிதி நிறுவனங்களிலிருந்து கடனாகப் பெறப்பட்டு, வரும் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும்.**

28. சென்னை நகரில் தொடர்ந்து நாளொன்றுக்கு 440 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதைச் செயலாக்க முடிந்தமைக்கான காரணம் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திலிருந்து தேவையான தண்ணீர் கிடைக்கப் பெறுவதேயாகும். குடிநீர் அளவினை உயர்த்தியுள்ள அதே நேரத்தில், குடிநீர் விநியோக ஏற்பாடுகளை மேம்படுத்த

முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நடப்பு நிதி ஆண்டில் வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி ஆகிய இரண்டு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன. மீதமுள்ள 10 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிகள் வேகமாக நடந்துவருகின்றன.

29. வரும் நிதி ஆண்டில் சென்னைக் குடிநீர் இரண்டாம் திட்டத்திற்காக ரூ.105 கோடியும், சென்னை கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டத்திற்காக ரூ.75 கோடியும் ஒதுக்கப் பட்டுள்ளது.

## நகர்ப்புற வளர்ச்சி

30. நமது நாட்டில் மிக அதிகமாக நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். அடுத்த சில ஆண்டுகளில், நமது மாநிலத்தின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகர்ப் பகுதிகளில் வாழ்ந்து வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. அதிலும் குறிப்பாக, நமது மாநிலத் தலைநகரமாம் சென்னைப் பெருநகர்ப் பகுதி, இந்நாட்டிலுள்ள முக்கியமான தொழில் மற்றும் வணிக மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. அதன் விளைவாக இம்மாநகரில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

32. விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகளுக்காக மாநில அரசு, தேவைப்படும் அரசு நிலங்களை இலவசமாக அளிப்பதோடு, திட்டச் செலவின் மூன்றில் இரண்டு பங்கையும் ஏற்றுக்கொள்கிறது. **இந்த இரயில் பாதையை, பரங்கிமலை வரை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

33. கடற்கரை–தாம்பரம் புறநகர் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் பணியும், மாநில அரசின் 50 விழுக்காடு பங்குத் தொகையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தின் கீழ், இந்தப்பாதையில் உள்ள இருப்புப் பாதைக் கடவுகள் (Level Crossings), மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகளாக மாற்றப்படும்.**

34. தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரை மாநகரப் புறவழிச் சாலை, கோயம்பேட்டில் வெளியூர் பேருந்து முனையம், மாநகரில் பல சிறு மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் ஆகிய பணிகள் நிறைவடையும்போது சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடி கணிசமாகக் குறையும்.

35. சென்னை வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டத்தின் கீழ் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா ஆகியவை தூர்வாரப்பட்டு சீரமைக்கப்படும். இப்பணியை மேற்கொள்வதற்கு வசதியாக, ஆற்றின் கரைகளில் தற்போது வசித்து வருகின்ற குடிசை வாழ்மக்களை வேறு இடத்தில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணி நிறைவடைந்ததும் இந்த ஆறுகளின் கரையோரப் பகுதிகளைச் செம்மைப்படுத்தி, பொது மக்களுக்குத் தேவையான கூடுதல் வணிக வசதிகளும் மனமகிழ் வசதிகளும் உருவாக்கப்படும். இப்பெருந்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஓரிரு மாதங்களில் பணி தொடங்கப்படும். மாநகர் சென்னையை தூய்மையும், அழகும் நிறைந்ததாக மாற்றிக் காட்ட மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டுகிறேன்.

## பொதுவிநியோகம்

36. நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையான பகுத்துண்டு பல்லுயிர் வாழ்வதற்கேற்ப, மக்களுக்கு உணவுப்பொருள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கும், அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் பொது விநியோகமுறையில் இடையறாத அக்கறை காட்டுகிறது இந்த அரசு. அதனால்தான் பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் அரிசியின் சராசரி கொள்முதல் விலை 1995–96 ஆம் ஆண்டில் கிலோ ஒன்றுக்கு ரூ. 6.70 என்று இருந்து, தற்போது ரூ.8.08 ஆக அதிகரித்துள்ளபோதிலும் அரசு அரிசி விலையை உயர்த்தவில்லை. இதனால் 1995–96ல் ரூ.653 கோடியாக இருந்த அரசு வழங்கும் உணவு மானியம், 1998–99ல் ரூ.1,000 கோடியாக உயர்ந்துள்ளது. இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி உயர்விலிருந்து மக்கள் மீளாத நிலையில், மத்திய அரசு அண்மையில் அரிசி, கோதுமை, சர்க்கரை, யூரியா, சமையல் எரி வாயு போன்றவற்றின் விலையை உயர்த்தியுள்ளது, ஏழை எளிய நடுத்தர மக்களையும் விவசாயப் பெருங்குடி மக்களையும் தண்டிப்பதாகும். முக்கியமாக அரிசி

விலையின் உயர்வு மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதாலும், வெளிச்சந்தையிலும் விலை உயரலாம் என்பதாலும், அரிசி விலை உயர்வை மக்கள் மீது சுமத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். இந்த முடிவின் காரணமாக, மாநில அரசின் சுமை ஆண்டொன்றுக்கு மேலும் சுமார் ரூ.160 கோடி அதிகரிக்கும்.

37. குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதை சீரமைப்பதற்காக, நாட்டிலேயே முன்னோடியாக மண்ணெண்ணெய் விநியோக நிலையங்களை ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்றை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நீண்ட வரிசையில் நெடுநேரம் காத்திருக்கின்ற நிலையை அகற்றிடவும், நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவுக்குறைவைத் தடுத்திடவும் இவை உதவியுள்ளன. **334 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களுக்கு இதுவரை அனுமதியளிக்கப்பட்டு, 121 செயல்படத் தொடங்கியுள்ளன. மீதமுள்ளவை அனைத்தும் அடுத்த சில மாதங்களில் செயல்படத் தொடங்கும்.**

## வேளாண்மை

38. உழுதுண்டு வாழ்வோராய் மற்றவரையும் வாழவைப்போராய் மாநிலத்தின் மக்கள் தொகையில் 65 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்திருக்கின்றனர். அவர்தம் அயரா உழைப்பால் சென்ற நிதி ஆண்டில் 85 இலட்சம் டன்னாக இருந்த உணவுப் பொருள் உற்பத்தி நடப்பு நிதி ஆண்டில் 98 இலட்சம் டன்னாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

39. **தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 15 விழுக்காடு தரிசு நிலம் ஆகும். இத்தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான வரலாற்றில் இடம்பெறும் பெருந் திட்டமொன்று வரும் நிதி ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 10,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும். தரிசு நிலங்களின் தன்மை அறிந்து அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் தான் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் ஏழ்மை நிலையில் வாழும் மக்களின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. அதற்கான ஆக்கப்**

**பணிகளை வரையறுத்து செயல்படுத்திட வல்லுநர்கள் கொண்ட தரிசு நில மேம்பாட்டு ஆணையம் (Wasteland Development Authority) உருவாக்கப்படும்.**

40. கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடை செய்தவுடன் உரிய விலையைப் பெறுவதற்கும் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துள்ள சர்க்கரை ஆலைகள் வழிவகை செய்வது போன்ற சட்டபூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி; **காய்கறிகள் பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் பங்கேற்கும் திட்டமொன்று வரும் நிதி ஆண்டிலிருந்து துவங்கப்படும்.**

41. தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் உபரியாக இருக்கின்ற காலத்தில், உழவர்கள் அவற்றைச் சேமித்து வைத்து நியாயமான விலை பெறுவதற்கு ஏதுவாக, குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்குகள் கட்டி செயல்படுத்தும் திட்டம் ரூ.40.52 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு ரூ.4.7 கோடி செலவில் சென்னை, திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

42. வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு வரும் நிதி ஆண்டில் ரூ.21 கோடியும் டேனிடா நிதியுதவியுடனான தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்திற்கு ரூ.6.23 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**43. தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் தொகையைக் கட்டாமல் தவணை தவறிய விவசாயிகளின் எண்ணிக்கை 81,553. இதில் 21,898 பேர் பெரிய விவசாயிகள். ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எனது பதிலுரையில் அறிவித்திருந்தவாறு மீதமுள்ள சுமார் 60 ஆயிரம் சிறு, குறுவிவசாயிகள் மீது கூட்டுறவு வங்கிகளினால் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மற்ற மாவட்டங்களுக்கும் பொருந்தும்.**

## பாசனம்

44. நீரோடை நிலங்கிழித்து வீணாகப் போகாமல், 'நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்தைச்' செயல்படுத்தி உலக வங்கி உதவியுடன் இந்த அரசு பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவதற்கும், கால்வாய்களை மேம்படுத்துவதன் மூலம் பாசனத் திறனை அதிகரிப்பதற்கும், முடிவடையாமலுள்ள ஒன்பது பாசனத் திட்டங்களை விரைந்து முடிப்பதற்கும் முனைந்துள்ளது. இதுவரை ரூ.344 கோடி மதிப்பீட்டுச் செலவில் 174 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ.219 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணியில் விவசாயிகள் பங்கு கொள்ளும் வகையில் விவசாயிகளின் குழுக்கள் உருவாக்கப்படும்.

45. பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்வதிலும், வெள்ளம் விரைவில் வடிந்தோடச் செய்வதிலும் தூர் வாரும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு, சென்ற இரண்டாண்டுகளாக ரூ.58 கோடி செலவில் இப்பணியினைச் செயல்படுத்தியுள்ளது. **இத்திட்டத்தின் நற்பயனையும் விவசாயிகளின் நல்வரவேற்பினையும் கருத்தில் கொண்டு, வரும் நிதி ஆண்டில் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் 472 கிலோமீட்டர் நீளத்திற்கு ஆற்றுப்படுகை, 1,624 கிலோமீட்டர் நீளத்திற்கு வடிகால்கள், 1,816 கிலோமீட்டர் நீளத்திற்கு கால்வாய்கள் மற்றும் 136 குளங்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

46. ரூ.665 கோடி மதிப்பீட்டில் 53 நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில் ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள நிலங்கள் பயன்பெறும் நிலையூர் கால்வாய்த் திட்டம், ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மிருகண்டா நதி நீர்த்தேக்கத் திட்டம், ரூ.23 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ளாறு நீர்த்தேக்கத்திட்டம், ரூ.6 கோடி மதிப்பீட்டில் காவிரியில் மேலணை (முக்கொம்பு) பலப்படுத்தும் திட்டம், ரூ.9.5 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறையார் திட்டம் மற்றும் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டத்தில்

18–ம் கால்வாய்த்திட்டம் ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

## மீனவர் நலன்

47. சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், இது வரை 12,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, 7,155 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கான செலவு ரூ.32,000 த்திலிருந்து ரூ.37,000 ஆக உயர்த்தப்பட்டது. வரும் நிதி ஆண்டில் ரூ.14.80 கோடி ஒதுக்கீட்டில் மேலும் 4,000 வீடுகள் கட்டப்படும்.

48. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 1.69 இலட்சம் கடலோர மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசு இதுவரை ரூ.12.75 கோடி அனுமதித்துள்ளது. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடரும். எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக சிறு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலைப் போக்க, ஏறத்தாழ 20,000 நாட்டுப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் மற்றும் டீசல் மானியமாக ரூ.3 கோடியை இந்த அரசு அனுமதித்துள்ளது. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படும். **உள்நாட்டு மீனவர் அமைப்புகளின் கோரிக்கைகளைப் பரிசீலித்து அவர்களின் மேம்பாட்டிற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.**

## கால்நடை வளர்ப்பு

49. கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசு ரூ.2.68 கோடி செலவில் 100 புதிய கால்நடை மருந்தகங்களைத் தொடங்கியுள்ளது. 50 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் 10 புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும்.

50. 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரசு, பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான விவசாயிகளுக்கு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.1.50 அதிகரித்து வழங்க முடிவெடுத்தது. இதனால் 1997–98–ல் 12.36 இலட்சம்

லிட்டராக இருந்த சராசரி தினசரி பால் கொள்முதல், நடப்பு நிதி ஆண்டில் 15.10 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

## சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனவளம்

51. தோல்பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசுக்கேட்டைத் தடுத்திட அரசு 26 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதி அளித்து, அதில் 12 நிலையங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. மேலும் சாயத்தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசுக் கேட்டைத் தடுத்திட அரசு 22 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதி அளித்து, அதில் 5 நிலையங்கள் செயல்பட துவங்கியுள்ளன. எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன. இதே போல ஜவ்வரிசி ஆலைகளால் ஏற்படும் மாசுக்கேட்டைத் தடுத்திட பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கும் திட்டத்திற்கும் உதவித் தொகை அளிக்குமாறு மத்திய அரசைக் கோரியுள்ளோம்.

52. 1996–97 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய நதி நீர் செயல் திட்டத்தின் கீழ் பவானி, ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், திருச்சி ஆகிய நகரங்களில் காவிரி ஆற்றில் மாசு தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில் இதற்காக ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

53. தமிழ்நாடு வனவளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் வனப்பகுதிக்கு அருகேயுள்ள 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாண்டுகளில் சுமார் 1,50,000 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டு வன நிர்வாக ஏற்பாடு (Joint Forest Management) மூலம் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன், 75,850 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணியை மேற்கொள்வதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.96.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சாலைகள்

54. 1972 ஆம் ஆண்டிலேயே கழக அரசு பொறுப்பில் இருந்தபோது, 1,500 க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளோடு

இணைக்கின்ற முதற்கட்ட முயற்சி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அடுத்தக் கட்ட முயற்சியாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990 ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமிருந்த 517 கிராமங்களில், 216 கிராமங்களுக்கு கடந்த நிதியாண்டில் இணைப்புச்சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. **எஞ்சியுள்ள 301 கிராமங்களுக்கு இந்த நிதியாண்டு இறுதிக்குள் இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன்பயனாக இணைப்புச் சாலை வசதிகள் இல்லாத 1000க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை அடைந்திடுவோம். அடுத்து, 500 முதல் 1,000 வரையிலான மக்கள் தொகையை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு முதற்கட்டமாக வரும் நிதி ஆண்டில் இவ்வசதி செய்யப்படும்.**

55. கடந்த மூன்றாண்டுகளில் சாலை மேம்பாட்டுக்காக நபார்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) உதவியுடன் ரூ.702 கோடி மதிப்புள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டிற்கு ரூ.256 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

56. ரூ.450 கோடி செலவில் 208 பாலங்கள் கட்டும் பணி அண்மையில் தொடங்கப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. ரூ.20 கோடி செலவில் காரனோடைப் பாலம், ரூ.12 கோடி செலவில் கரூர் பாலம், தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரை ரூ.43 கோடி செலவில் சென்னை புறவழிச் சாலை, ரூ.36 கோடி செலவில் மதுரை புறவழிச் சாலை, மேலும், ரூ.92 கோடி செலவில் கோயம்புத்தூர் புறவழிச் சாலை, ஆகியவற்றுக்காக தொடங்கப்பட்டுள்ள பணிகள் இரண்டு ஆண்டுகளில் நிறைவடையும். சென்னை மாநகரிலுள்ள ஆரச் சாலைகளை (Radial Roads) ரூ.212 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி அடுத்த மாதம் தொடங்கப்படும்.

57. சாலைப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு நிதி ஆண்டில் ரூ.254 கோடி என்றிருப்பது, வரும் நிதி ஆண்டுக்கு ரூ.270 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால்

பாதிக்கப்பட்ட சாலைகளில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சாலை மீளமைப்புப் பணியின் தரம் பொதுமக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, வரும் நிதி ஆண்டிலிருந்து நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி, சாலைகளை மீளமைப்பதற்கு ஒவ்வோராண்டும் மேற்சொன்ன சாலைப் பராமரிப்பு நிதியிலிருந்து சிறப்பாக ரூ.100 கோடி ஒதுக்கப்படும்.

## போக்குவரத்து

58. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தம் திறமையான செயல்பாட்டின் அடிப்படையில், தேசிய அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில், 7,309 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. இக்கழகங்களில் கொள்முதல் நிர்வாக முறையைச் சீரமைத்ததன் மூலம், செலவு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நாட்டிலேயே மிகக் குறைந்த கட்டணமாக தமிழ்நாட்டின் பேருந்துக் கட்டணம் தொடர்ந்து இருந்து வருவதால், நடப்பு நிதி ஆண்டில் சுமார் ரூ.400 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும். வரும் நிதி ஆண்டில் அரசின் பங்குத் தொகையாக வழங்குவதற்கு ரூ.100 கோடியும், மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கியதற்கான ஈட்டுத்தொகைக்காக ரூ.80 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

59. மினி பஸ் திட்டம் தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களின் வரவேற்பைப் பெற்று வருகிறது. தற்போது சுமார் 320 மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் பெருகும்.

## மின் வசதி

60. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின் வாரியத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1,034 கோடியாக அதிகரிக்கும்.

61. சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில் 196 மெகாவாட் திறன் கொண்ட முதலாவது தனியார் மின்திட்டம் நடப்பாண்டில் உற்பத்தியைத் தொடங்கி, அதன் திறப்பு விழா வரும் 28ஆம் தேதி நடைபெற உள்ளது. மேலும், நாகப்பட்டினம் மாவட்டம்,

பிள்ளைப்பெருமாள்நல்லூரில் 330 மெகாவாட் மின் திட்டம், நெய்வேலியில் 250 மெகாவாட் மின் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன. சமயநல்லூரில் 106 மெகாவாட் மின் திட்டம், சாமல்பட்டியில் 106 மெகாவாட் மின் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணி இந்த மாதத்தில் தொடங்கப்படும். இவை அனைத்தும் தனியார் முதலீடு செய்யும் மின்திட்டங்களாகும்.

62. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வாயிலாக இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு, நாகப்பட்டினம் மாவட்டம் கோவில்களப்பாலில் 90 மெகாவாட், இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்தில் 60 மெகாவாட், நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலத்தில் 60 மெகாவாட் மின்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகளும் வரும் நிதி ஆண்டில் தொடங்கப்படும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் புதுப்பித்து, நவீனமயமாக்கும் பணி வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

63. மின் அனுப்புகை மற்றும் விநியோகத்தின் போது ஏற்படும் மின் இழப்பு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மின் விநியோகத்தை மேம்படுத்துவதற்கும், சீரமைப்பதற்கும் வரும் நிதி ஆண்டில் ஒதுக்கீடு ரூ.427 கோடியாக இருக்கும்.

## தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு

64. தொழில்வளர்ச்சியில் நேர்மையும் நேயமும் நிறைந்த அணுகுமுறையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. தொழில் முனைவோரின் திட்டங்களுக்குத் தாமதமின்றி ஒப்புதலளிக்க ஒற்றைச் சாளர முறையும் (single window), தகவல் தொழில்நுட்பம் போன்ற வேகமாக வளர்ச்சி அடையக்கூடிய துறைகளுக்கு தனிக் கொள்கைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

65. நடப்பு நிதி ஆண்டில், நமது மாநிலத்தில் ஹூண்டாய், மிட்சுபிஷி மோட்டார் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை இம்மாதம் 19 ஆம் தேதி காலையில் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.

66. தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்குத் தேவையான தொழில் வளர்ச்சி மையங்களும் வளாகங்களும் அமைப்பதற்காக

15,301 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இதுவரை 6,160 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கும்மிடிப் பூண்டியில் ரூ.19.90 கோடி திட்ட மதிப்பீட்டிலான ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா உருவாக்கும்பணி முடியும் தருவாயில் உள்ளது. பெருந்துறை வளர்ச்சி மையத்தின் முதல் கட்ட மேம்பாட்டு பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும்.

67. பொதுத்துறை நிறுவனங்களின் செயல் திறனை சீரமைப்பதற்கான வழிமுறைகள் குறித்து பரிந்துரைகள் செய்வதற்காக திரு எஸ்.வி.எஸ் இராகவன் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**68. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகமும் (TACID) தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சிக் கழகமும் (SIPCOT) ஒரே பணியினை மேற்கொள்வதால் டாசிட் நிறுவனம் சிப்காட்டுடன் இணைக்கப்படும். அவ்வாறு இணைக்கப்பட்ட பின்பு, சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணியில் மட்டும் ஈடுபடும். சிப்காட் இதுவரை மேற்கொண்டிருந்த கடன் வழங்கும் பணி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (TIIC) மாற்றப்படும்.**

**69. போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவி கழகத்தையும் (TDFC) தமிழ்நாடு மின்சக்தி நிதியுதவிக் கழகத்தையும் (POWER FINANCE) இணைத்து தமிழ்நாடு கட்டமைப்பு வசதி நிதிக் கழகம் (TIFC) அமைக்கப்படும்.**

**70. தொழில் வழிகாட்டி நிறுவனம் (TAMIL NADU GUIDANCE BUREAU) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தோடு (TIDCO) இணைக்கப்பட்டு அதன் ஒரு பிரிவாக செயல்படும். இக்குழுவின் ஏனைய பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன.**

## தகவல் தொழில் நுட்பம்

71. நேற்றிருந்த புதுமை இன்றில்லை எனும் பெருமை படைத்த இந்த விஞ்ஞான உலகத்தில், இன்றைய புதுமையாக

விளங்கும் தகவல் தொழில் நுட்பவியலை நமது சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம்.

**72. பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் விழைவாகும். நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பாடமுறையை உருவாக்கி கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம், கணினிகளை நிறுவி, மாநில முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11–12 வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் வரும் கல்வியாண்டில் இருந்து தொடங்கப்படும். இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 மாணவர் என்ற அடிப்படையில், சுமார் 48,000 மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் (Software) துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.**

73. கணினிப் பயன்பாடுகளில் உலக அளவில் பொதுவான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. இதைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு 'தமிழ்நெட் 99' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை கடந்த பிப்ரவரித் திங்கள் 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் நடத்தியது. பொதுவான தமிழ்க் குறியீடுகளை வடிவமைக்கவும், தமிழ் விசைப்பலகையைத் தரப்படுத்தும் நோக்கத்தோடும் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் ஏழு நாடுகளைச் சேர்ந்த 150 வல்லுநர்கள் கலந்து கொண்டு ஒருமித்த முடிவுகளை எடுத்துள்ளனர்.

**74. தமிழ் மென்பொருள் விரைவான வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக 'தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி' ஒன்றை தமிழக அரசு உருவாக்கும். உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University) ஒன்றினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட முயற்சிகளால் இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்களைத் தமிழகம் மட்டுமின்றி உலகெங்கிலுமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பெறுவார்கள்.**

**75. இங்கிலாந்திலுள்ள வேர்ல்டு டெல் (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் கூட்டுத்**

**தொழில் முயற்சி, இம்மாநிலம் முழுவதிலும் பரவலாக இணையத் தொடர்பு வசதிகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், சுமார் 1,50,000 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்திட வழி வகுக்கும். இதன் வாயிலாக, கணினி சொந்தமாகப் பெற்றிராத, தமிழ் மொழியை மட்டுமே அறிந்த மக்களும், தங்களது இல்லங்களுக்கு அருகில் அமைந்துள்ள சமுதாய இணைய மையங்களில் தங்களின் அன்றாடத் தேவைகள் பலவற்றிற்காக, நியாயமான கட்டணத்தில் இணைய வசதிகளைப் பெற இயலும்.**

**76. கணினியைப் பயன்படுத்தி நெடுந்தொலைவிற்கு அப்பால் உள்ள மருத்துவ வல்லுநர்களிடமிருந்து அறிவுரை மற்றும் வழிகாட்டுதலுடன் நவீன மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கு "தொலைத் தொடர்பு வழி மருத்துவ" (Telemedicine) வசதி நமது மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும். தொடக்கத்தில், வட்ட மருத்துவமனை ஒன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றுடன் கணினி மூலமாக இணைக்கப்படும். இவ்வசதி படிப்படியாக மாநிலமெங்கும் விரிவாக்கப்படும்.**

## கல்வி

77. வாழும் உயிர்க்கு எண்ணும் எழுத்தும் ஒளியுமிழ் இரு கண்ணாகும் என்றுணர்ந்து கடமையாற்றும் இந்த அரசு கல்வித் துறைக்கு வரும் நிதி ஆண்டில் ரூ.4,092 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**78.** இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அனைத்துச் சிறார்களுக்கும் 14 வயது வரை கட்டாயக் கல்வியை அளிக்கும் நோக்கத்துடன், தொடக்கக் கல்விக்கு உயர் முன்னுரிமையை இந்த அரசு அளித்து வருகிறது. தொடக்கக்கல்வி அனைவருக்கும் கிடைத்திட "தொடக்கக் கல்வி இயக்கம்" ஒன்று வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். **தொடக்கக் கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவதற்கு விழிப்புணர்ச்சி முகாம்கள் பள்ளி தொடங்குவதற்கு முந்தைய மாதமான மே மாதம் நடத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வு நிறுவனங்கள், கல்வியில் அக்கறை கொண்ட பொதுமக்கள், கிராமசபையினர், ஆசிரியர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன்**

**அனைத்து சிறார்களையும் பள்ளிகளில் முழுமையாகச் சேர்ப்பதற்கு இந்த முகாம்கள் பயன்படுத்தப்படும்.**

79. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று கூறியிருந்தேன். அதற்கேற்ப நடப்பு நிதி ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுவிட்டன. வரும் நிதியாண்டில் எஞ்சியுள்ள தொடக்கப் பள்ளிகளையும் துவங்கி, சொன்னதைச் செய்வோம் என்பதை நிரூபிப்போம்.

**80.** ஆரோக்கியமான உடலே ஆரோக்கியமான உள்ளத்தின் உறைவிடமாகும். உடற்பயிற்சியோடு விளையாட்டுகளின் மூலம் கட்டுப்பாடு (Discipline), குழு உணர்வு (Team Spirit), தலைமைப் பண்புகள் (Leadership Qualities) போன்றவை இளம் பருவத்திலேயே உருவாகின்றன. பரப்பளவிலும் மக்கட்தொகையிலும் குறைந்த இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான கிரிக்கெட் கிளப்புகளும், கால் பந்தாட்டக் கிளப்புகளும் இருக்கின்றன. ஆனால் இங்கு அரசு முனைப்பு காட்டி உற்சாகமூட்ட வேண்டிய நிலை இருக்கிறது. **கால்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், கபடி, ஹாக்கி, ஓட்டப் பந்தயங்கள் போன்ற அனைத்து முக்கிய விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, இனி ஒவ்வோராண்டும் உயர்நிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவிலான போட்டிகளும், அவை முடிந்த பிறகு மாவட்டங்களுக்கு இடையிலான மாநில அளவுப் போட்டியும் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும். ஆண்டுதோறும் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கான பரிசுகளையும், சுழற்கோப்பைகளையும் அளித்து உதவுமாறு தனியார் துறையினரும் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.**

81. பல்கலைக்கழகங்களுக்கான ஒட்டு மொத்த மானியம் கடைசியாக 1992 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டிலிருந்து இந்த மானியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

82. சென்ற நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு பல்தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களில்

மாணவர்களைச் சேர்ப்பதற்கு 'ஒற்றைச்சாளரமுறை' அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

83. உலக வங்கியுதவியுடனான தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, வரும் நிதி ஆண்டில் ரூ.19.7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**84. இந்த அரசு அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் 15 விழுக்காடு இடங்களை கிராமப்புற மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் நகர்ப்புற எல்லைகளிலுள்ள கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் நகர்ப்புற மாணவர்கள் சிலரும் பயன் பெற்று கிராமப்புற மாணவர்களின் வாய்ப்பு, குறைவதைக் கருதி, இந்த ஒதுக்கீட்டின் முழுப்பயனும் மெய்யான கிராமப்புற மாணவர்களுக்கு மட்டும் கிடைப்பதற்கு, உரிய முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.**

**85. 1997ஆம் ஆண்டு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, மாவட்டங்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை நீக்கி, 15 பல்கலைக் கழகங்களில் அந்தத் தலைவர்களின் பெயர்களால் தலா ரூ.25 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்து 28 அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, அதற்கு ரூ.7 கோடி வழங்கப்பட்டது. இந்த அறக்கட்டளைகளிலிருந்து படிப்புதவித் தொகை வழங்கும் அடிப்படையை அரசு மாற்றியமைத்துள்ளது. ஆண்டு வருமானம் ரூ.44,500 என்ற உச்சவரம்பை நீக்கவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பிறவகையான படிப்புதவித் தொகை பெற்றிருப்பினும் இதற்கும் தகுதியுடையவர்களாக இருப்பர் என்றும் அரசு தற்போது முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அனைத்துத் தரப்பு மாணவர்கள் ஆண்டுதோறும் 1,500 பேர் பயனடைவார்கள்.**

## தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாடு

86. தமிழ்மொழி காக்கும் போரில் விழுப்புண் பெற்ற கழக அரசு, தமிழ்மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்காகவே

ஆணையொன்றை இந்த ஆண்டு பிறப்பித்துள்ளது. தமிழகத்தில் மொழி சிறுபான்மையினருக்கான பள்ளிகள் தவிர, பிற பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்கள் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் – குறிப்பாக மழலையர் பயிலும் பள்ளிகளில் ஆங்கிலத்தில் மட்டும் கற்பிப்பதை மாற்றியமைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்களில் கணிதம், அறிவியல், சமூகவியல் ஆகிய மூன்றில் குறைந்தபட்சம் இரண்டினை தமிழில் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு மட்டும் ஏற்பளிப்பது என்று அரசு முடிவெடுத்துள்ளது. முற்றிலும் தமிழ் வழியில் பாடங்கள் நடத்தப்படும் பள்ளிகளுக்கு பதிவுக் கட்டணத்தை அரசு பாதியாகக் குறைத்துள்ளதோடு மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும் வழங்கும். ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு அங்கீகரித்துள்ள பள்ளிகளில் சேர விண்ணப்பிக்கும்போது அப்பள்ளிகளில் தேர்வு நடத்தி அத்தேர்வுகளின் அடிப்படையிலேயே உரிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

**87.** ஒவ்வொரு மாவட்டத்திலும் இசைப் பள்ளியைத் தொடங்கும் நோக்கத்துடன், இரண்டு ஆண்டுகளில் பத்து இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. **வரும் நிதி ஆண்டில், மேலும் ஐந்து மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் தொடங்கப்படும்.**

**88. வரலாற்றுக்கு முந்தைய காலம் (Pre-historic period), தொல் பழங்காலம், சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை உள்ள தமிழக வரலாற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சியாக வைக்கப்படும். இதற்காக வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையைப் பெற்று, ஒரு தனி அமைப்பின் மூலம் அந்த வரலாற்றுக் கண்காட்சி உருவாக்கப்படும்.**

**89. கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலும், 18 ஆம் நூற்றாண்டிலும் சீர்காழியில் வாழ்ந்த இசை மேதைகளான முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை ஆகிய மூவரும் தமிழில் கீர்த்தனைகளை இயற்றி தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். சீர்காழியில் இவர்களுடைய சிலைகள் அமைந்த மணிமண்டபம் ஒன்று நிறுவப்படும். ஆண்டுதோறும் அங்கே மாபெரும் தமிழிசை விழா நடைபெறவும் ஏற்பாடு செய்யப்படும்.**

## இந்து சமய அறநிலைய நிர்வாகம்

90. கோயில்கள் கொள்ளையடிப்போர் கூடாரமாய் மாறிவிடக்கூடாது என்பதற்காக அவற்றுக்குரிய சொத்துக்களைக் கணக்கெடுத்து அவற்றைப் பாதுகாக்கவும், அவற்றிலிருந்து கோயில்களுக்கு வரவேண்டிய வருமானத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும், கோயில்களில் சொத்து பதிவேடுகள் தயாரிக்கும் பணி முனைப்புடன் நடைபெற்று வருகிறது. கடந்த 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1,192. கடந்த மூன்றே ஆண்டுகளில் இந்த ஆட்சியில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1,660. மீதமுள்ள 122 கோயில்களுக்கான பதிவேடுகளும் விரைவில் தயாரிக்கப்படும்.

**91. 1996 ஜூன் முதல் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் 273 ஏக்கரும், மனை நிலங்கள் 253 கிரவுண்டும் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. நியாய வாடகை நிர்ணயம் செய்த பிறகு கோயில்களுக்கு ரூ.6 கோடி அதிக வருமானம் வந்துள்ளது.**

## மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலன்

92. நகர்ப்புற வாசிகள் மட்டுமின்றி – கிராமப்புறங்களிலும் நலிவுற்றோர் நல்ல மருத்துவ வசதி பெற்றிட நாளும் பணியாற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வரும் நிதி ஆண்டில் ரூ.1,079 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

93. கடந்த மூன்று ஆண்டுகளில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு அனுமதியளித்து, அதில் 434 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 157 கட்டிடங்கள் இம்மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும். எஞ்சியவை வரும் நிதி ஆண்டில் கட்டப்படும்.

94. தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. இக்கல்லூரிக்கு இதுவரை இந்திய மருத்துவ மன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. ஒப்புதல் பெற்ற பின், வரும் கல்வி ஆண்டிலிருந்து இக்கல்லூரி செயல்படத் துவங்கும். வேலூரில் அதற்கு அடுத்த கல்வி ஆண்டில் புதிய

மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவங்கவும் அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

95. ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பராமரிக்க, முதற்கட்டமாக 40 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். இதுவரை 42 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

96. 1972–73ல் கழக அரசினால் கண்ணொளி வழங்கும் திட்டம் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்தில் இடையில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி, கண்மருத்துவ சிகிச்சை வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்திட, அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு முக்கிய வட்ட மருத்துவமனைகளில் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளும், 29 மாவட்டங்களிலும் நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **கண் உள் ஆடி (intra ocular lens) பொருத்துவதில் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதோடு, வரும் நிதி ஆண்டில் ஒரு இலட்சம் பேருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அந்த ஆடி (lens) இலவசமாக வழங்கப்படும்.**

## வாழ்வொளித் திட்டம்

**97. பள்ளிச் சிறார்களின் உடல் நலம்பேணிக் காப்பது மிக அவசியம். சிறுவயதில் சில நோய்கள், பள்ளிப்படிப்பில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும், வருங்காலத்தில் பெரிய நோய்களாகவும், ஊனங்களாகவும் உருவாகும் தன்மை கொண்டவையாகும். எனவே ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலரும் வாரத்தில் ஒரு நாள் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களைப் பரிசோதித்து தேவையிருப்பின் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று சிகிச்சை அளிப்பார். மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்கான இந்த "வாழ்வொளித் திட்டம்" வரும் கல்வி ஆண்டு முதல் தீவிரமாக செயல்படுத்தப்படும். தற்போது சென்னை**

**மாநகராட்சியில் இந்தத் திட்டம் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது.**

**சத்துணவு**

98. டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்திற்கு வரும் நிதி ஆண்டில் ரூ.532 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் வாயிலாக 74.78 இலட்சம் சிறார்கள் பயனடைந்து வருகின்றனர். சத்துணவுத் திட்டச் செயல்பாட்டையும், இந்த அரசு தொடங்கிய வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்தையும் கண்காணித்து, திறம்படச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் சத்துணவு மையங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்து, குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்கும்.

**மகளிர் நலன்**

99. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்துவர் என்பதை மெய்ப்பித்துக் காட்டி வரும் இந்த அரசு, மகளிர் மேம்பாட்டுக்காக, வரும் நிதி ஆண்டில் ரூ.94.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஏழை எளிய பெண்களுக்காகவும்,ஏழை விதவையர்களின் பெண்களுக்காகவும், விதவைகளுக்காகவும் கலப்புத் திருமணத் திற்காகவும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூ.70 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறுவோர் 70,000 மணப்பெண்கள் ஆவர். **இத்திட்டத்தை செயல்படுத்துவதில் குறிப்பாக வயது, கல்வி சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும், முறைகேடுகளையும் களையும்பொருட்டு, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான கல்வித் தகுதியைப் பத்தாவது வகுப்பாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் வரும் நிதி ஆண்டிலும் 70 ஆயிரம் பெண்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.**

100. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், வரும் நிதி ஆண்டில் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

**101. மதுரை மாவட்டத்தில் 15 இடங்களிலும், மற்ற சில மாவட்டங்களிலும் மகளிரே நடத்தும் நியாயவிலைக் கடைகள் சிறப்பாக செயல்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. நியாய விலைக் கடைகள் மற்ற இடங்களிலும் இவ்வாறு நல்ல முறையில் செயல்பட மேலும் அதிக அளவில் நியாய விலைக் கடைகளை மகளிரே நடத்த அரசு ஊக்கம் அளிக்கும்.**

## மகளிர்க்கு குறைந்த வட்டியில் கூட்டுறவுக் கடன்

102. நகர்ப்பகுதிகளில் வாழும் ஏழை எளிய மகளிர் தம் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகவும், சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்காகவும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்திட, நகர்ப்புற ஏழை மகளிருக்கான "சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்" ஒன்றை 1.1.1999 முதல் அரசு தொடங்கியுள்ளது. சிறு வியாபாரம் செய்து அதன் மூலம் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்ற மகளிருக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னையில் தொடங்கிய இத்திட்டம் சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான மகளிர் பயன் பெற்று வருகின்றனர். அவற்றைத் தொடர்ந்து எல்லா நகர்ப்பகுதிகளிலும் மேலும் விரிவுபடுத்தப்படும்.

## ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலன்

103. அடித்தட்டு மக்களை சமுதாயப் பொருளாதாரத் துறையில் கைதூக்கிவிட கங்கணம் கட்டிக் காரியமாற்றும் இந்த அரசு தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதியை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வரும் நிதி ஆண்டில் இது ரூ.509 கோடியாக இருக்கும்.

104. தனிநபர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்கள், தொழில் துறையிலும் சேவைத் துறையிலும் தொழில் முனைவர்களாக விளங்கிட வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. கணினி, தட்டச்சு, சுருக்கெழுத்து, துணித் தொழில் வடிவமைப்பு, பிளாஸ்டிக் செய்முறைகள் போன்ற வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

105. சுதந்திரப் பொன்விழா ஆண்டில் துவங்கி சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.17.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலும் 50 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும். **சமத்துவபுரம் திட்டத்திற்கு நான் அடிகோலியவன் என்றாலும், இத்தகைய கொள்கை வழிச் சாதனை புரிந்திட என்னை ஆளாக்கிய பெரியார் பெயரால் "பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்" என இத்திட்டம் இனி அழைக்கப்படும்.**

106. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்கு பயிற்சி அளிக்க சென்னையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒன்றும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும், ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன. இப்பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம்மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்கு தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளையும் தரத்தையும் மேம்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## பிற்படுத்தப்பட்டோர்–மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

107. பிற்படுத்தப்பட்டோர்–மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுக்காகவும் அவர்கள் சேதாரமின்றிப் பயன்கள் பெறுவதற்காகவும் தனித்துறை, தனி அமைச்சர் அமைத்தது கழக

அரசேதான். அத்துறைக்கென வரும் நிதி ஆண்டில் ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

108. கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ரூ.18 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

109. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறை வருமாண்டுகளில் மிகப் பெருமளவு வேலை வாய்ப்புகளை அளிக்கும் என்பதால், அவர்களில் 5,000 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

### அரசுப் பணிகளில் நியமனம் பற்றிய குழுக்கள்

**110. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசுத் துறைப் பணிகளிலும், அரசு நிறுவனப் பணிகளிலும் பணி நியமனம் பற்றி இரு துறைகளின் குழுக்களால் ஆராயப்பட்டு அக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைச்சர்கள், அத்துறைகளின் செயலாளர்கள் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது. அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் முடிவினை அரசு அறிவிக்கும்.**

### கைத்தறி நெசவாளர் நலன்

111. உழவுத் தொழிலுக்கடுத்து மக்களின் உயிரனைய தொழிலான நெசவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் இந்த அரசு, சென்ற நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட உயர் நிலைக் குழுவின் அறிக்கையைப் பெற்று அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்தி வருவதை அனைவரும் அறிவீர்கள்.

**112. 60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை ரூ.25,000 லிருந்து ரூ.35,000 ஆக நடப்பு நிதி ஆண்டில் இந்த அரசு உயர்த்தியுள்ளது. வரும் நிதி ஆண்டிலிருந்து இத்தொகை ரூ.40,000 ஆக உயர்த்தப்படும்.**

113. ரூ.185.26 கோடி மதிப்பீட்டுச் செலவில் 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் புனரமைப்புத் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

## தொழிலாளர் நலன்

**114.** சென்ற நிதி நிலை அறிக்கையில், நிர்வாகம், தொழிலாளர் மற்றும் அரசுப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாநில அளவிலான அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களின் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, பல்வேறு தொழிலாளர் நல உதவித் தொகைத் திட்டங்கள் வரும் நிதி ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் என்று கூறியிருந்தேன். அதற்கிணங்க ஒன்பது தொழிலாளர் பிரதிநிதிகளையும், ஒன்பது நிர்வாகப் பிரதிநிதிகளையும், ஆறு அரசு அலுவலர்களையும் கொண்ட நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். **அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் (Group Personal Accident Relief Scheme), மகப்பேறு நலத்திட்டம் (Maternity Benefit Scheme), பணி முடிவு நலத் திட்டம் (Terminal Benefit Scheme) ஆகிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் அமைப்பு ரீதியில் இல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.**

115. கொத்தடிமைகளைக் கண்டறிவதற்காக 1997–ல் ஆய்வு செய்யப்பட்டு 25,008 பேர் கொத்தடிமைத் தொழிலாளர்களாக இருப்பது கண்டறியப்பட்டது. அரசு எடுத்த நடவடிக்கைகளினால் இதுவரை 4,774 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வுக்கான நிதியுதவி அளிக்கப்பட்டது. மீதமுள்ள கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

116. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த திரு கோலப்பன் குழுவின் அறிக்கையின் மீது அரசு உரிய முடிவு எடுத்து இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

**பத்திரிகையாளர் நலன்**

117. 1996–97 ஆம் ஆண்டு பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டது. **தற்போது அவர்களின் கோரிக்கையை ஏற்று ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணிபுரியும்போது பத்திரிகையாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.25,000 லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**

118. கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர் போன்ற பல்வேறு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.150 ஆக உயர்த்தப்பட்டு, அதனால் 8,43,295 நபர்கள் பயன் பெறுகின்றனர். இது தவிர, அவர்களுக்கு தீபாவளி மற்றும் பொங்கல் நாட்களில் வேட்டி, சேலைகளும் சத்துணவு நிலையங்களில் மதிய உணவும், வாரம் ஒருமுறை அரை கிலோ அரிசியும், மதிய உணவு அருந்தாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

119. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கும், அகதி முகாம்களிலிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும், முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் பொங்கல் நாளையொட்டி 70 இலட்சம் இலவச வேட்டிகளும், 77 இலட்சம் இலவச சேலைகளும் ரூ.100 கோடி செலவில் நடப்பு நிதி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

120. **இந்த அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின் அடிப்படையில், மனிதக் கழிவுகளை மனிதன்**

எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்றுவதற்கான சட்டமுன் வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் செய்ய வசதி போன்ற மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த போதுமான நிதி வரும் நிதி ஆண்டிலேயே ஒதுக்கப்படும்.

### சமூக சீர்திருத்தத் துறை

**121.** சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க, கூட்டப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சமத்துவ சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக சமூக சீர்திருத்தத்துறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தத் துறையை அமைப்பது குறித்து, சமூகவியல் வல்லுநர்கள் கொண்ட ஆய்வுக் குழு பேராசிரியர் சுந்தரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று தலைமைச் செயலகத்தில் இந்தப் புதிய துறை செயல்படத் தொடங்கும்.

### தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சி

**122.** உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு மோகன் தலைமையில் அரசு நியமித்த உயர்மட்டக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிடவும் அரசு சார்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

## வீட்டு வசதி

123. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.252 கோடி மதிப்பீட்டு செலவில் 15,500 குடியிருப்புக்களைக் கட்டி முடிக்கும். ரூ.44.61 கோடி செலவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புதிய விடுதி கட்டும் பணி வரும் நிதி ஆண்டில் முடிவடையும்.

124. 1970 ஆம் ஆண்டு கழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இதுவரை 66,014 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.389.48 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்காக கட்டியுள்ளது. தற்போது மேலும் 3,000 அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆறு மாநகராட்சிப் பகுதிகளில் 50,025 குடும்பங்கள் ஆட்சேபனை இல்லாத இடங்களில் குடிசைகளில் வசித்து வருகின்றனர். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு 7,936 குடும்பங்களுக்கு ரூபாய் ஐந்து கோடி செலவில் இந்த நிதி ஆண்டில் கல்நார் தகடுகளிலான கூரை கொண்ட வீட்டுவசதி செய்யப்பட்டுள்ளது. **மீதமுள்ள அனைத்து குடிசை வாழ் குடும்பங்களுக்கும் தீப்பற்றாத கல்நார் தகடுகளிலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகளை அடுத்த இரண்டாண்டுகளில் அமைத்துத் தர ஒரு பெரும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்து வரும் இரண்டாண்டுகளில் ரூ.52.6 கோடி செலவில் 42,089 குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டப்படும். மாநகராட்சிகளைத் தொடர்ந்து படிப்படியாக மற்ற நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.**

125. **சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய் சீரமைப்புத் தூய்மைப் பணி மேற்கொள்வதற்காக அங்குள்ள குடிசை வாழ் குடும்பங்களை அப்புறப்படுத்தி முதற்கட்டமாக ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடியமர்த்த ரூ.37.5 கோடி செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்படும்.** மற்றும் ரூ.60 கோடி மதிப்பீட்டில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6500 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வரும் பணி விரைவில் முடிவுபெறும். வரும் நிதி ஆண்டில் இதற்காக ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**126. சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் குடிசைப் பகுதிகளில் வாழும் 30,000 குடும்பங்களுக்கு ரூ.6 கோடி செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.**

**சுதந்திரப் பொன் விழா ஆண்டு**

127. கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தேசத் தியாகிகளையும், மொழிக் காவலர்களையும் போற்றிடும் இந்த அரசின் சார்பில் கடந்த நிதி நிலை அறிக்கையில் கூறியவாறு சுதந்திரப் பொன் விழா ஆண்டையொட்டி தியாகிகளின் நினைவாக, காந்தி மண்டபம் அருகே, கிண்டியில் ரூ.30 இலட்சம் செலவில் தியாகிகள் மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மதுரை திருமங்கலத்தில் விடுதலைப்போராளி தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவாக ரூ.62 இலட்சம் செலவில் நினைவு இல்லம் உருவாக்கப்பட்டுள்ளது.

128. திருநெல்வேலி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் நினைவாக புதிய மாளிகை ரூ.57 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டு பூலித்தேவன் சிலையும் அமைக்கப் பட்டுள்ளது.

129. ரூ.25 இலட்சம் செலவில் முன்னாள் முதல்வர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு சென்னையில் நினைவிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

130. வேலூர் சிப்பாய் கலவரம் எனும் சுதந்திரப் போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த இந்தியப் படைவீரர்களின் நினைவாக ரூ.3 இலட்சம் செலவில் நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது .

131. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பாட்டுக்கோட்டையாக உயர்ந்து நின்ற கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவகம் ஒன்று அமைப்பதற்காக ரூ.20.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணி நடந்தேறி வருகிறது.

132. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலையில் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களுக்கு ரூ.20.50 இலட்சம் செலவில் நினைவகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**133. வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 200வது ஆண்டை நினைவு கூர்ந்திடும் வகையில் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி, தூத்துக்குடி மாவட்டம் கயத்தாற்றில் இந்த அரசின் சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்படும்.**

**134. அதேபோல் மானங்காத்த சீமையின் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200ஆம் ஆண்டினை நினைவு கொள்ளும் வகையில் 2001ம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படும்.**

135. கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தவாறு அரசியல் வித்தகர், அடிமட்டத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம் அமைக்கும் பணி 23-10-98 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**136. இனமானம் போற்றிய தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்களின் நினைவாக குன்றக்குடியில் நினைவு மண்டபம் உருவாக்கி அதில் நூலகமும் அமைக்கப்படும்.**

**137. தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதற்காக உண்ணா நோன்பிருந்து உயிர் விட்ட விடுதலை வீரர் உத்தமத் தியாகி சங்கரலிங்கனார் சிலையும், பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக உயிரைப் பொருட்படுத்தாமல் கொடிக்கம்பத்தின் உச்சியில் ஏறி கொடி ஏற்றியவரும் நாட்டு விடுதலைக்காக பலமுறை சிறை சென்றவருமான ஆர்யா என்ற பாஷ்யம் அவர்களின் சிலையும் சென்னையில் உள்ள தியாகிகள் மணி மண்டபத்தின் முகப்பில் அமைக்கப்படும்.**

**138. வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து, அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்காக பெயர்கள் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் மொழிக் காவலர்களின் வாரிசுகளுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.**

## குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

139. வான்புகழ் கொண்ட வள்ளுவரின் திருவுருவச் சிலை ரூ.8.79 கோடி மதிப்பீட்டுச் செலவில் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் அமைக்கப்படுகின்ற சீரிய பணி வரும் நிதி ஆண்டில் முடிவடையும் என்பதை அளவற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசுப் பணியாளர் நலன்

140. இம்மாநிலத்தில் அரசு அலுவலர்களுக்கு ஊதியம் மற்றும் சலுகைகள் பொதுவாக மத்திய அரசுக்கு இணையாகவும், ஒருசில இனங்களில் அதற்கு மேலாகவும் 1989ஆம் ஆண்டிலேயே அளித்தது கழக அரசுதான் என்பதை அனைவரும் அறிவீர்கள். அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தபடி அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் மத்திய ஊதியம் மற்றும் ஓய்வூதிய விகிதத்தை 1.1.96லிருந்து முன்தேதியிட்டு நிலுவை உட்பட ரூ.3,630 கோடி ரூபாய் கூடுதல் செலவில் இந்த அரசு அளித்துள்ளது. தென் மாநிலங்களில் கேரள மாநிலம் இந்த ஊதிய விகிதங்களை அதன் பணியாளர்களுக்கு 1.3.97–லிருந்தும், கருநாடக மாநிலம் 1.4.98–லிருந்தும் அளித்துள்ளன என்பதும், ஆந்திர மாநிலத்தில் இதுவரை திருத்திய ஊதிய விகிதங்கள் அளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

141. திரு.சிவசுப்ரமணியம் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்கள், அலுவலக கண்காணிப்பாளர்கள், காவலர்கள் போன்ற பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைத்துள்ளோம். இது தவிர, அமைச்சுப் பணியாளர்களுக்கும், அவர்கள் நிலையிலுள்ள பிற பணியாளர்களுக்கும் 5 விழுக்காடு தனி ஊதியம் வழங்கியுள்ளோம். சத்துணவுத் திட்ட பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், இரவுக் காவலர்கள் ஆகியோரின் ஊதியமும், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களின் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றுக்காக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு மேலும் கூடுதலாக ரூ.196 கோடி செலவாகும்.

142. பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது. இதனைப் பின்பற்றி மாநில அரசும் இவர்களின் ஊதிய விகிதத்தை 1–1–96 முதல் மாற்றியமைக்க முடிவு எடுத்து ஆணைகள் விரைவில் வெளியிடப்பட உள்ளன.

143. அரசு அலுவலர்கள் சொந்த வீடு கட்ட நடப்பு நிதி ஆண்டில் ரூ.82.75 கோடி கடன் வழங்கப்படும். மேலும், ஹட்கோ (HUDCO) எச்.டி.எப்.சி (HDFC) போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து அரசு கடன் பெற்று, வீடு கட்ட முன் பணம் அளித்திட வரும் நிதி ஆண்டில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**144. மத்திய அரசு 1996க்கு முன்பு ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியத்தை மீண்டும் அதிகரித்துள்ளது. மாநில அரசும், மத்திய அரசு அறிவித்த அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை 1–4–99 முதல் அளிக்க முடிவு எடுத்துள்ளது.**

145. மத்திய அரசைப் பின்பற்றி மாநில ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் 1.1.96 முதல் மாற்றியமைக்கப்பட்டபோது, அரசு அலுவலர்களைப் போலவே 40 விழுக்காடு ரொக்கமாக இரண்டு தவணைகளிலும், மீதம் உள்ள 60 விழுக்காடு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு வட்டியோடு திருப்பி அளிக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். ஓய்வூதியர்கள் தங்கள் வயதினைக் கருதி நிலுவைத் தொகை அனைத்தும் ரொக்கமாக அளிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தனர். **அவர்கள் கோரிக்கையையும் அரசின் தற்போதைய நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு நடப்பு நிதி ஆண்டில் அளித்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காடு போக 40 விழுக்காடு வரும் நிதி ஆண்டிலும், மீதமுள்ள 40 விழுக்காடு அடுத்த நிதி ஆண்டிலும் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.** இதனால் வரும் நிதி ஆண்டில் அரசுக்குக் கூடுதலாக ரூ.25 கோடி செலவும், அடுத்த நிதியாண்டில் சுமார் ரூ.50 கோடி செலவும் ஏற்படும்.

## ஆண்டுத் திட்டம்

146. ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஒவ்வோராண்டும் தொடர்ந்து எய்தி வரும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. இதை மத்திய திட்டக் குழு பாராட்டியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும் ரூ.4,500 கோடி திட்ட ஒதுக்கீடு முழுமையாக எய்தப்படும். மத்திய திட்டக் குழுவுடன் கலந்து ஆலோசித்த பிறகு, வரும் நிதி ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீடு ரூ.5,250 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதி ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைவிட 17 விழுக்காடு அதிகமாகும்.

## நிதி நிலைமை

147. நடப்பு ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை 1998 மார்ச் திங்களில் அவையில் வைத்த போது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15039.46 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18048.04 கோடியாகவும் இருந்தன. இவ்வாண்டிற்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.14198.52 கோடியாகவும் வருவாய்க் கணக்கில் செலவு ரூ.17183.94 கோடியாகவும் குறைந்துள்ளன.

148. 1998–99 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்த பற்றாக்குறை ரூ.876.67 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால், திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ.235.73 கோடியாகக் குறைந்துள்ளது.

149. 1999–2000 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய் கணக்கில் வரவுகள் ரூ.15867.78 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18500.32 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

150. 1999–2000 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை ரூ.790.13 கோடியாக அதிகரித்துள்ளது. இப்பற்றாக்குறையைக் குறைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## வணிக வரிகள்

151. அனைத்து மாநிலங்களிலும் வணிகவரி வீதங்கள் ஒரே சீராக இருந்தால் மாநிலங்களிடையே வரி மாற்றங்களில் போட்டி இல்லாமல் தொழிலையும் வாணிபத்தையும் ஊக்குவிப்பதோடு மாநிலங்களின் வருவாயையும் பெருக்கிட முடியும். அகில இந்திய அளவில் இதற்கான முயற்சிகள் கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்தபோதிலும் இதுவரை இதில் ஒரு இறுதியான முடிவு எடுக்க இயலவில்லை. எனினும் நமது மாநிலத்தில் மேற்கண்ட கருத்தின் அடிப்படையில் பல பொருள்களின் வரி வீதத்தை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது.

152. தமிழக வரலாற்றில் முதல் முறையாக நிதி நிலை அறிக்கை தயாரிக்குமுன்பு மாநிலத்தில் உள்ள அனைத்து வர்த்தக சங்கங்கள், உயர் மட்ட பல்தொழில் முனைவோர் சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்களின் உறுப்பினர்களை அழைத்து அவர்களுடைய கருத்தினைக் கேட்டு அவற்றைப் பரிசீலித்து அண்மை மாநிலமான கர்நாடகத்தில் இருப்பது போலவே பின்வரும் வரி மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

* கணினிகள் மற்றும் புற உறுப்புகள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. அவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கம் செய்யப்படுகிறது,

* தடையிலா மின் வழங்கும் அமைவுகளுக்கு விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட அட்டவணை பிரிவு டி–18ல் உள்ள மின்னணு படிப்பெருக்கிப் பொறிகள் முதலானவற்றுக்கும், வரிசை எண் 19–ல் உள்ள மின்னணு அட்டவணையிடும் பொறிகள் முதலானவற்றுக்கும், வரிசை எண் 20–ல் உள்ள மின்னணு தொலையச்சுப்பொறி மற்றும் தொலை நகல் பொறிகள், வரிசை எண் 21–ல் உள்ள மின்னணு தட்டச்சுப் பொறிகள், வரிசை எண் 26–ல் உள்ள ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள் முதலானவைகள், வரிசை எண் 52–ல் உள்ள ஒலிப்பதிவு மற்றும் மறு ஒலிக்கருவிகள் போன்றவை, வரிசை எண் 58–ல் உள்ள

தொலைக்காட்சி படம் எடுக்கும் கருவிகள் முதலியவை மற்றும் வரிசை எண் 61-ல் உள்ள படம் பதிவு செய்யும் கருவிகள் முதலானவைகளுக்கு விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* செல்லுலார் தொலைபேசிகளுக்கு விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* அட்டவணை பகுதி-சி வரிசை எண் 18 மற்றும் 49-ல் உள்ள ரொக்கம் பதிவு செய்யும் மின்னணு பொறிகள், டிராட்சிஸ்டர்கள் போன்றவற்றிற்கு விதிக்கப்படும் வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 4 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக உயர்த்தப் படுகிறது.

* தங்கம், வெள்ளிக் கட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது. இவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கப்படுகிறது.

* பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழு விற்பனை வரி விலக்கும் மற்றும் அவ்வாறு விற்கப்பட்ட தங்கத்திற்கு, தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு பிரிவு 7-அ வின் கீழ் விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்படுகிறது.

* முதலாம் அட்டவணை பகுதி-இ வரிசை எண் 20-ல் உள்ள வைரம் முதலான விலை மதிப்புள்ள கற்களுக்கு விதிக்கப்படும்வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது,

* முதலாம் அட்டவணை பகுதி ஜி வரிசைஎண் 6–ல் உள்ள படிபெருக்கிஇயந்திரங்கள் முதலானவற்றிற்கு விதிக்கப்படும் வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* வணிகச்சின்னம் இடப்பட்ட ரஸ்க் மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து ரொட்டிக்கு இணையாக 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் (Compact Fluorescent Lamp) மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப் படுகிறது.

* அனைத்து வகை மோட்டார் வாகனங்களில் பொருத்தப்படும் பல்புகள் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது,

* வாழ்த்து அட்டைகள், அழைப்பிதழ்கள் போன்றவை மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் (REP licences) போன்றவற்றிற்கும், விசை உழுக்கருவிகளின் இழுவைகள், இரும்பு வகையல்லாத உலோகங்களின் கழிவுகள், கம்பளியால் பின்னப்பட்ட பொருள்கள், சர்பத்துகள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* காகித உறைகள், தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிபெருக்கும் காகிதம், உயர்தன்மைக் காகிதம் மற்றும் மின்சார உதவி இல்லாமல் தயார் செய்யப்படும் தகர கொள்கலன்கள் ஆகியவற்றின் மீது

விதிக்கப்படும் வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* செயற்கை இழைநூலுக்கும், செயற்கை இழைகளுக்கும் (man made fibre and yarn) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் 26.3.99 வரை 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக அளிக்கப்பட்ட வரிக் குறைப்பு அதே நிபந்தனைக்குட்பட்டு காலவரையின்றி நீட்டிக்கப் படுகின்றது.

* தமிழ்நாடு பொது விற்பனைச் சட்டம் பிரிவு 3(4)–ன் கீழ் விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேலும் மாதம் ஒரு முறை வழங்க வேண்டிய படிவம் 17, வருடத்திற்கு ஒரு முறை வழங்கினால் போதுமானது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* சித்த மருந்துகள், சூரிய ஒளியால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள் (saree falls) மற்றும் காலணிப்பட்டிகள் ஆகியவற்றிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

* காஸ் (Gauze), பாண்டேஜ் துணிகளுக்கான (bandage) வரிவிலக்கு வரம்பு ரூ.50 லட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படுகிறது.

* தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் பகுதி –டி வரிசை எண் 67–ல் உள்ள எந்த அட்டவணையிலும் இடம்பெறாத பிற பொருட்கள் அவற்றிற்கு ஈடான பொருள்கள் இடம்பெறும் பகுதிகளில் சேர்க்கப்படும்.

**153.** இம்மாற்றங்களால் வரி வருவாயில் ஏற்படும் விளைவுகளை ஓர் ஆண்டுக்குப் பின் பரிசீலித்து எதிர்பார்த்த கூடுதல் வரி வருவாய் கிடைக்கவில்லை என்றால் இவற்றில் தக்க மாற்றம் செய்ய நேரிடும்.

**154.** பான்மசாலா மீது விதிக்கப்படும் வரி 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது.

**155.** சிகரெட் பிடிப்பது மக்களின் நல்வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் பழக்கமாகும். எனவே அதனால் விளையும்

கேட்டினை பெருமளவு குறைப்பதற்காக பீடி நீங்கலாக சிகரெட், போன்ற ஆடம்பரப் புகையிலைப் பொருள்களுக்கு வரும் நிதி ஆண்டிலிருந்து அண்டை மாநிலங்களில் உள்ளது போல 5 சதவிகிதம் ஆடம்பர வரி விதிக்கப்படும்.

156. வணிகராகப் பதிவு செய்ய மொத்த விற்பனைத் தொகை சென்ற நிதி நிலை அறிக்கையில் ரூ.75,000 விருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. வரி விதிப்பிலிருந்து விலக்குக்கான வரம்பையும் வணிகராக பதிவு செய்ய உள்ள வரம்பையும் ஒரே சீராக ஆக்க முடிவெடுத்து பதிவு செய்ய மொத்த விற்பனைக்கான வரம்பு ரூ.3,00,000 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த மாற்றத்தால் 20,000–த்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயன் அடைவார்கள்.

157. தற்போது குடிமுறைப் பொறியியல் வேலைகளுக்கு (Civil Engineering Works) இணக்க (compound) முறையில் வரி செலுத்தும் விருப்பத்தேர்வு ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல் மற்ற வேலை ஒப்பந்தங்களுக்கும் இணக்க வரி முறை அனுமதிக்கப்பட்டு, வரிவீதம் மொத்த விற்பனையளவில் 4 விழுக்காடு என்று நிர்ணயிக்கப்படுகிறது.

## ஆயத்தீர்வை

158. மது இனங்களின் மீதான ஆயத்தீர்வையை புரூப் லிட்டர் (Proof Littre) ஒன்றுக்கு ரூ.10 வீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் நோக்கத்தோடு 100 மில்லி லிட்டர் பாட்டில்களில் வரும் சாதாரண மது வகைகளுக்கு ஆயத்தீர்வை அதிகரிக்கப்பட மாட்டாது.

## மோட்டார் வாகன வரி

159. தனியார் சேவை வாகனங்கள் மீதான வரி ஒரு இருக்கைக்கு காலாண்டுக்கு ரூ.50 லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்படுகிறது. வாடகைப் பெருவண்டிகளுக்கு (Maxi Cab) தற்போதுள்ள வரி ஒரு இருக்கைக்கு காலாண்டுக்கு ரூ.1800 லிருந்து ரூ.2100 ஆக உயர்த்தப்படுகிறது.

160. மோட்டார் வாகன வரி செலுத்தும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைக் குறைக்க கடந்த நிதி ஆண்டிலிருந்து ஒப்பந்த ஊர்திகள் மோட்டார் வாகன உரிமக் கட்டணம் செலுத்தும் போது அத்துடன் மோட்டார் வாகன வரியும் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வசூலிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை பெற்றுள்ள நல்ல வரவேற்பைக் கருத்தில் கொண்டு, வரும் நிதி ஆண்டிலிருந்து இதனை சரக்கு (Goods Carriages) வாகனங்களுக்கும் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றிற்கு இதன் கீழ் வரி செலுத்துவது விருப்பத்தின் அடிப்படையில் இருக்கும்.

## கூடுதல் நிதி ஆதாரங்கள்

161. வரிவிதிப்பை மட்டுமே நம்பியிராமல், மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வழிகள் பலவற்றையும் நாம் கண்டுள்ளோம். சென்ற நிதி ஆண்டில் சிறுசேமிப்பு நிகர வசூலிலிருந்து மத்திய அரசிடம் ரூ.397 கோடி கடனாக பெற்றதற்கு மாறாக, இந்த நிதி ஆண்டில் ரூ.779 கோடி பெற்றுள்ளோம். மேலும், கூடுதல் நிதி கிடைப்பதற்கு மாநிலத்தில் சிறு சேமிப்பு வசூலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

162. தமிழ்நாடு மின்சார வாரியம் பத்திரங்கள் வெளியிடுவதன் வாயிலாக, மூலதனச் சந்தையிலிருந்து நடப்பு நிதி ஆண்டில் ரூ.297 கோடி திரட்டியுள்ளது. வரும் நிதி ஆண்டில், அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்காக மூலதனச் சந்தையிலிருந்து மேலும் அதிக நிதியாதாரங்கள் திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

163. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு (TAMIN) வழங்கப்பட்டு, அந்நிறுவனத்தினால் பயன்படுத்தப்படாமல் உள்ள கிரானைட் குத்தகைகளை அக்கனிம வளங்களைப் பயன்படுத்தும் திறமையுள்ள நிறுவனங்களுக்கு ஏல முறையில் அளிப்பதன் மூலம் மேலும் வருவாய் அதிகரிக்கும்.

164. குறைவான மதிப்பில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக, ஏராளமான ஆவணங்கள் சிறப்பு துணை மாவட்ட

ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடம் நிலுவையாக உள்ளன. அவற்றின்மீது விரைவில் முடிவு எடுத்து அரசுக்கு அதிக வருவாய் ஈட்டுவதற்காக, புதிய திட்டம் ஒன்று 1.3.1999 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பத்திரங்களைப் பதிவு செய்தோர், பதிவுத்துறை நிர்ணயித்த வரிக்கும் அவர்கள் செலுத்திய வரிக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகையில் 50 விழுக்காட்டினை 1999 ஜூன் திங்களுக்குள் செலுத்தினால் பத்திரங்கள் அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். இத்திட்டத்தினால் முத்திரை வரி மூலம் அரசுக்கு வருவாய் கணிசமாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

165. வணிக வரி நிலுவைகளை முனைப்புடன் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டில் ரூ.43 கோடியாக இருந்த வணிகவரி நிலுவை வசூல், நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரித் திங்கள் வரை ரூ.130 கோடியாக உயர்ந்துள்ளது. வரி நிலுவைகளைக் குறைக்க சட்ட மாற்றங்கள் செய்வது பற்றியும் பரிசீலித்து வருகிறோம். வணிகவரி பற்றிய மேல் முறையீடுகள் பல்வேறு மேல் முறையீட்டு நிலைகளில் பல்லாண்டுகளாகத் தேங்கி கிடப்பதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் கோடிக்கணக்கில் நிலுவையில் உள்ளது. இந்தத் தொகையில் கணிசமான பகுதியை விரைவில் வசூலித்திட, மத்திய அரசு செயல்படுத்திய "சமாதான்" திட்டம் போன்ற ஒன்றை நமது மாநிலத்தில் செயல்படுத்துவது பற்றி பரிசீலித்து வருகிறோம்.

166. நம்மாநிலத்திற்கு சந்தன மர ஏற்றுமதி வாயிலாக, அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 1500 டன் சந்தன மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளோம். இதை பிரதமர் மற்றும் தொடர்புடைய மத்திய அமைச்சர் ஆகியோரது நேரடிக் கவனத்திற்குக் கொண்டு சென்ற பின்னரும், இதற்கு ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை. இது தொடர்பாக தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

167. நமது மாநிலத்தின் முக்கியமான கனிம வளமான பழுப்பு நிலக்கரி(lignite) குறித்த உரியத் தொகை (royalty) 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு திருத்தியமைக்கப்படவில்லை. இது, மாநில அரசுக்குக் கணிசமான வருவாய் ஆதாரமாக இருப்பதால், பழுப்பு நிலக்கரிக்கான உரியத் தொகையை உயர்த்துமாறு மத்திய

அரசைக்கோரியுள்ளோம். மத்திய அரசு இது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

168. பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள் கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப் பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு, செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்ததற்கேற்ப தற்போது அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்திவரும் திட்டங்களை ஆய்வு செய்து உரிய பரிந்துரைகள் அளிக்குமாறு மாநிலத்திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

169. வரிவிதிப்புகள் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயான ரூ.261 கோடியை கணக்கில் கொண்டபின்பு வரவு–செலவு இறுதிப்பற்றாக்குறை ரூ.529.13 கோடியாக இருக்கும்.

பேரவைத் தலைவர் அவர்களே,

170. இந்த நிதி நிலை அறிக்கை, அவையில் உள்ள அன்புக்குரிய உறுப்பினர்களின் கரங்களில் தவழ்வதற்கும்,தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை இயன்ற வரையில் இடையறாது பணியாற்றி நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப் படுவதற்கும், என்னுடன் அயர்வின்றி ஒத்துழைத்துக் கடமையாற்றியுள்ள நிதித்துறைச் செயலாளர் திரு.பி.வி.ராஜாராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசின் அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞானத்தால்
பராக்கிரமத்தால், அன்பால்
உன்னத இம மலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

கைத்திறச் சித்திரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தகசாலை எங்கும்
புதுக்கு நாள் எந்த நாளோ ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்,
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண் வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ ?

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கங் கொண்டு கனவு கண்ட அந்த நாளை உருவாக்க நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், தீட்டும் திட்டங்கள், ஓர் அணிற் குஞ்சின் முயற்சியாகவாவது இருக்குமென்று 1996–97 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கவிஞர் பெருமகன் எழுப்பியுள்ள கேள்விக்கு விடையளிக்கும் வகையில்;

அந்நாள் இந்நாள் எனும்படியாக அந்தப் பொன்னாள் கண்டிட தூய்மை நிறை பொதுவாழ்வில் தோய்ந்துள்ளோர் அனைவரும் துணை நிற்க வாரீர் என அழைத்து இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

**மு. கருணாநிதி,**
**முதலமைச்சர்.**

சென்னை
1999 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 17 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2030,
பங்குனி திங்கள் 3 ஆம் நாள்.